# LAABH SAMACHAR

Volume: 09 Issue : 03 **July 2020** Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

Emirates IndiGo Lufthansa spiceJet flying for everyone

அஸ்கி பிளையிட் டிக்கெட் அவ்ரோஜொல்
உன்னோ மோளும் அப்பை

K.K. Nagar, Madurai. Mob : 9787 066 066

வேதவல்லி ஹாலிடேஸ்




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536

METRO



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO ®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX ®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.

Contact: 93441 97952





LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.

Contact: 93441 97952



## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெச்கோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

மத்திய அரசு தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்து வருகிறது. முத்ரா திட்டத்தின் கீழ் உள்ள சிசுக் கடன்களை உரிய தவணை முறையில் திரும்பச் செலுத்தினால் 2% வட்டி மானியம் அளிப்பது, ஊழியர்களின் பயணப்படிக்கு வரிவிலக்கு சலுகை, ஜி.எஸ்.டி வரி செலுத்துவதை எளிமையாக்கும் முயற்சிகள், சாலையோர வியாபாரிகளின் வளர்ச்சிக்காக சிறிய அளவிலான கடன்கள் அளிப்பது என மிகச்சிறப்பாக மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

அதன்படி, தற்போது எளிய முறையில், சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவுக்கான புதிய நடைமுறையான **உத்யம் பதிவு** (Udhyam Registration) என்ற பெயரில் இந்த மாதம் 01.07.2020 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில், இ.எம்-II, உத்யோக் ஆதார் (யு.ஏ.எம்.) பதிவு அல்லது வேறெந்த பதிவையோ வைத்துள்ளவர்கள் தாங்களாகவே மீண்டும் பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நம் சேம்பர் உறுப்பினர்கள் இந்த பதிவை பெற்று பயனடைய கேட்டுக்கொள்கிறோம்.

நமது சேம்பர் உறுப்பினர்கள், இந்த கொரோனா ஊரடங்கு காலத்தில் கொரோனாவிடமிருந்து தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகளை பின்பற்றுங்கள். நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும் உணவுகளை எடுத்துக்கொள்ளுங்கள், யோகாசனத்தை மேற்கொள்ளுங்கள், சமூக விலகலை கடைபிடியுங்கள் முக்கியமாக, தினந்தொறும் வரும் கொரோனா குறித்த செய்திகளை தவிருங்கள். ஏனெனில், கொரோனா நோயை விட கொரானா அச்சம் பரவலாக காணப்படுகிறது. மருத்துவர்கள் கூறும் தேவையான தகவல்களை மட்டும் கேட்டு உங்கள் அன்றாட செயல்களில் தைரியமாக ஈடுபடுங்கள்.

நன்றி

**– குமரன் B ஜகுவா**

## திருக்குறள்

**சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

சௌராஷ்ட்ர மொழியில்: து3ருகு3 ப3லம்கீர்தி ஜீட்3ணா ஹொயெதின்தென்
ர்ஹான்லெக்குஜெய் ஹனன் ஹோடு3

**பொருள்:** (பாதுகாப்பான இட வசதி இல்லை என்பதற்காக இருக்கிற இடத்தையும் விட்டுவிடக்கூடாது). பாதுகாப்பு வசதியும் மற்றச் சிறப்புகளும் இல்லாவிட்டாலும் மக்கள் அவரவர்களுடைய உறைவிடத்தை விட்டுவிடாமல் இருப்பது அருமையான காரியம்.

அதிகாரம் 50 | இடன் அறிதல் (காரியம் செய்யத்தக்க இடத்தை அறிதல்) | அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

**16.06.2020** – அன்று **Knowledge Empowerment** என்ற தலைப்பில், மாலை 6 மணி அளவில் ஜூம் செயலியில் சிறப்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக Dr. G.K. ஸ்ரீநிவாசன் குமரன் Ph.D., Founder, Yellowbuddhii, Neuro Scientist & Holistic Music Therapist அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**21.06.2020** – அன்று காலை 10.30 மணிக்கு 4வது செயற்குழு கூட்டம் ஜூம் செயலியில் நடைபெற்றது. முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**24.06.2020** – **Financial Planning** என்ற தலைப்பில் மாலை 6 மணி அளவில் ஜூம் செயலியில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இது குறித்து விளக்கமளிக்க திரு. T.R. சாந்தாராம் Former Senior Bank Manager, TRS Financial Services அவர்கள் உரையாற்றினார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி குழுத்தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**30.06.2020** – அன்று மாலை 6 மணிக்கு ஜூம் செயலி மூலம் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. 4ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களை மூன்று பிரிவுகளில் வெவ்வேறு தலைப்புகள் அளிக்கப்பட்டு ஓவியப்போட்டி நடைபெற்றது. சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் நடுவராக இருந்து பரிசுக்குரிய ஓவியங்களை வரைந்த மாணவர்களை தேர்ந்தெடுத்தார். இந்த நிகழ்ச்சியை சேம்பர் பொழுதுபோக்கு குழுத் தலைவர் திரு T.N. சூரியபிரகாஷ் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

**07.07.2020** – **Brand your Passion** என்ற தலைப்பிலான கூட்டம் மாலை 6.30 மணிக்கு ஜூம் செயலியில் நடத்தப்பட்டது. இது குறித்து JFP. N.T. ஸ்ரீநிவாசன் MD., Akshaya Silks and Sarees, Walajahpet அவர்கள் விரிவாக உரையாற்றினார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**14.07.2020** – அன்று **Fundamentals of Digital Marketing & E-Commerce Techniques** என்ற தலைப்பிலான கூட்டம் மாலை 6.30 மணி அளவில் ஜூம் செயலில் நடத்தப்பட்டது. இது குறித்த திரு. R.K. பிரேம்நாத் Enterprise Data Architect, IMEX Business Solutions அவர்கள் உரையாற்றினார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

– K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காரணமாக இந்த ஜூலை மாதத்திலும் இ-புத்தகமாக நமது லாப் ஸமாச்சார் இதழை வெளியிட்டுள்ளோம். நோய்பரவலின் தாக்கம் அதிகமாக ஆங்காங்கு காணப்படுவதால் அரசும் வேறு வழியின்றி ஊரடங்கை எதிர்பார்க்காத தருணத்தில் அறிவிக்க நேரிடுகிறது. இதனால் அச்சிடப்பட்ட புத்தகமாக வெளியிட சிரமம் ஏற்படுகிறது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

ஆனால், இந்த இக்கட்டான சூழலிலும், ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து இ-புத்தகமாக காலம் தவறாமல் சரியாக 20ம் தேதி அன்று இதழை வெளிக்கொணர்ந்து வருகிறோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், இந்திய சீன எல்லையில் ராணுவ வீரர்கள் முகாமிட்டுள்ள லடாக் பகுதிக்கே சென்று வீர உரையாற்றியுள்ளார். அதிலும், நம் தமிழ்நாட்டின் உலகப்பொது மறை நூலான திருவள்ளுவரின் திருக்குறளில் ஒன்றை கூறி அதற்கு விளக்கமும் கொடுத்து வீரர்களுக்கு ஊக்கமளித்துள்ளார். தமிழ்நாட்டு மக்களை பாரதப்பிரதமர் அவர்கள் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளார். இது நம் தமிழுக்குக் கிடைத்த பெருமை. நமது பாரதத்தில் திருக்குறளைப்பற்றி அறியாதவர்களும் இன்று அறியச் செய்யும்படியான நிகழ்வு. பாரதப்பிரதமர் அவர்கள், திருக்குறளை உலக மக்கள் அனைவரும் கற்க வேண்டிய வாழ்வியல் நூல் என்று அறிவித்துள்ளதை வரவேற்கிறோம்.

மரத்திற்கு வேரே பலம். அதுபோல, பாரதத்தின் வேர் பகுதியில் இருக்கும் தமிழகத்தில் உருவான திருவள்ளவரின் இரண்டடி குறள் எல்லை காக்கும் வீரர்களை கூடுதல் பலத்தை சேர்த்துள்ளது. இந்த மகத்தான விஷயத்திற்கு காரணியான நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

- B.S. ஜெனார்த்தனன்

## இரங்கல்



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பொருளாளர் திரு. T.K.D. **மோகன்** அவர்களின் மனைவி திருமதி. T.M. **மீரா**, அவர்கள் 27.06.2020 அன்று இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



https://youtu.be/r1qBwwyuek4 https://youtu.be/PrhOAjODpGg

SCC PROGRAMME

## KNOWLEDGE EMPOWERMENT

கொரோனா ஊரடங்கினால் அனைவரும் வீட்டில் இருந்து வரும் நிலையில், தொழில் முனைவோர்களுக்காக நடத்தும் தொழில் குறித்த கூட்டங்களை நடத்துவதையும் தாண்டி வீட்டில் இருக்கும் இளைய சமுதாயத்தினருக்காகவும் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. அந்த வகையில், வருங்கால சந்ததியினரின் கல்வித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சியாக **Knowledge Empowerment** என்ற தலைப்பில், கடந்த 16.06.2020 அன்று மாலை 6 மணி அளவில் ஜும் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக Dr. G.K. ஸ்ரீநிவாசன் குமரன் Ph.D., Founder, Yellowbuddhii, Neuro Scientist & Holistic Music Therapist அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

சிறப்பு விருந்தினர் Dr. G.K. ஸ்ரீநிவாசன் குமரன் அவர்கள் தனது உரையில், இசையின் மூலம் அறிவைத் தூண்டி நன்கு இயக்கச்செய்தலே தமது Yellowbuddhii நிறுவனத்தின் நோக்கம் என்று சுருக்கமாக தெரிவித்தார். இது சிறு வயது முதலே செய்தல் அவர்களின் வாழ்நாளில் பல்வேறு வகையில் பயனுள்ளதாகவும், பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்தாகவும், பிரச்சனைகளுக்கு தீர்வு தேடும் அறிவும் அவர்களுக்கு மேலோங்கும் என்று தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் தாம் இருப்பதாக தெரிவித்தார். யூடியூப்-ல் Yellowbuddhii என்ற தேடினால் தாம் அளித்த பல்வேறு தகவல்களை காணலாம் என்று தெரிவித்தார்.

சேம்பர்-ன் அழைப்பை ஏற்று கலந்து கொண்டு பல்வேறு தகவல்களை வழங்கிய சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## FINANCIAL PLANNING

பணம் நம் வாழ்வின் இன்றியமையாத ஒன்று. பணத்தை சம்பாதிக்கத் தெரிந்த நமக்கு அதனை பயன்படுத்தும் வகையில் எவ்வாறு சேமிப்பது என்பது பற்றி தெரியும். ஆனால், சேமிப்புடன் நின்றுவிடாமல் முதலீட்டின் மூலமாக பணத்தை பெருக்குவது என்பது பற்றி அறிந்து கொள்வதும் நன்று.

இன்று கொரோனா ஊரடங்கு காரணமாக நாம் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ள சூழலில் நம் சேமிப்பு ஒன்று மட்டும் போதாது. அந்த சேமிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்கிற நிதி திட்டமிடலை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு **Financial Planning** என்ற தலைப்பில் கடந்த 24.06.2020 அன்று மாலை 6 மணி அளவில் ஜும் செயலியில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது குறித்து விளக்கமளிக்க திரு. T.R. சாந்தாராம் Former Senior Bank Manager, TRS Financial Services அவர்கள் கலந்த கொண்டார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சி குழுத்தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

அவர் கூறிகையில், முதலில், சேமிப்பு மற்றும் முதலீடு இரண்டிற்க்குமான வேறுபாடுகளை கூறினார். பிறகு, முதலீட்டின் உள்ள பல்வேறு வகைப்பாடு மற்றும் அதன் பயன்கள்குறித்து அழகாக எடுத்துரைத்தார். நேரடியாக சந்தையில் நம் பணத்தை முதலீடு செய்யாமல் மியூச்சுவல் பண்ட்-ல் முதலீடு செய்வது சிறந்தது என்றும் தெரிவித்தார். சந்தை வீழ்ச்சி அடைந்துள்ள தருணத்தில் முதலீடு செய்தால் அதிகப்படியான லாபத்தை பெறலாம் என்றும் தெரிவித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற சிறப்பு விருந்தினரை சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.


## இரங்கல்



திரு. T.N. தியாகராஜன்
மறைவு: 06.07.2020



புரோஹிதர் P.V. தினகரன்
மறைவு: 07.07.2020



டாக்டர். மேஜர். ராமச்சந்திரன்
மறைவு: 08.07.2020

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் அங்கத்தினர்களான, தியாக மூர்த்தி அலுமினியம் கோ. உரிமையாளர் திரு. T.N. தியாகராஜன், புரோஹிதர் திரு. P.V. தினகரன் மற்றும் டாக்டர். மேஜர். ராமச்சந்திரன் ஆகியோர் இறைவனடி சேர்ந்தனர் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவர்களை இழந்து தவிக்கும் தத்தமது குடும்ப உறுப்பினர்களுக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அதோடு, ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care



## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# BRAND *your* PASSION




இந்த உலகிற்கு தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புவோர்களுக்காக இந்த புதுமையான கூட்டம் **Brand your Passion** என்ற தலைப்பில் 07.07.2020 அன்று மாலை 6.30 மணிக்கு ஜும் செயலியில் நடத்தப்பட்டது.

இது குறித்து விளக்கமளிக்க JFP. N.T. ஸ்ரீநிவாசன் MD., Akshaya Silks and Sarees, Walajahpet அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. P.R. குபேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினர் அவர்களை மிக அருமையாக அறிமுகம் செய்து வைத்து பேச அழைத்தார்.

அதனை ஏற்று, உரையை துவக்கிய சிறப்பு விருந்தினர் திரு. N.T. ஸ்ரீநிவாசன் அவர்கள், PASSION என்பது நம் அன்றாட / சாதாரண செயல் அல்லது அடையாளங்களைத் தாண்டிய, நம்மிடம் இருக்கும் ஒரு சிறப்புமிக்க விஷயமே ஆகும். உதாரணத்திற்கு, வங்கியில் பணிபுரியும் நபர் தன்னிடம் இருக்கும் பேச்சாற்றலை பட்டிமன்றத்தின் மூலம் தன்னை உயர்த்தி, பட்டிமன்ற பேச்சாளர் ராஜா என்று இந்த உலகிற்கு அடையாளப்படுத்திக்கொண்டார். அதாவது, தம் Passion ஆக கருதிய பேச்சாற்றளை தமக்கு பட்டிமன்ற வாய்ப்பின் மூலம் தன்னை பிராண்ட் ஆக்கிகொண்டார்.

இது போன்று பலர் இருக்கின்றனர். தம் அன்றாட செயல்களையும் தாண்டி, தம் சிறப்பு மிக்க செயலின் மூலம் தன்னை இந்த உலகிற்கு அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதனை எவ்வாறு நாம் செயல்படுத்துவது? அதற்கு, நம்மை நாம் அறிந்த கொள்ள வேண்டும் நாம் எதில் சிறப்பு மிக்கவர்களாக உள்ளோம் என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அதனைத் தொடர்ந்து பயிற்சி செய்திடல் அவசியம். நாம் நம்மை உயர்த்த சாதாரண வாழ்க்கை முறையிலிருந்து மாறுதல் அவசியம். நமக்கான வாய்ப்பு எங்கு கிடைக்கும் என்று அதனை தேடிச் செல்ல வேண்டும். பிறரின் எதிர்மறையான கருத்துக்களுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

இந்த முறையில், நிச்சயம் நம்மிடம் இருக்கும் சிறப்பை இந்த உலகிற்கு பிரதிபலிக்க / அடையாளப்படுத்த முடியும். இது போன்ற செயல்களால், இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கு ஓர் உந்துதல் ஏற்படுகிறது. நம்மால் முடியும் என்ற வைராக்கியம் ஏற்படுகிறது. சோர்வை போக்க இது போன்ற சாதனையாளர்களின் அடையாளங்களை கண்டால் நிச்சயம் நம் வாழ்விலும் தொடர்ந்து முன்னேறலாம் என்று கூறி அருமையாக நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் தங்களின் சந்தேகங்களை கேட்டறிந்தனர். நமது சேம்பர், சிறப்பு விருந்தினர் திரு. N.T. ஸ்ரீநிவாசன் அவர்களை நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக, சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்





ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்
98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

https://youtu.be/cSmq8mBe4Cc

# Fundamentals of DIGITAL MARKETING & E-COMMERCE Techniques




கொரோனா ஊரடங்கின் காரணமாக இன்று டிஜிட்டலின் அவசியம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இனி வரும் காலம் டிஜிட்டலின் மயமாக்கலை நோக்கியே உள்ளது. இந்த டிஜிட்டலின் மூலம் நேரம், பணம் ஆகியவை மிச்சமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு, நம் சேம்பர் உறுப்பினர்கள் தங்கள் தொழிலை எவ்வாறு டிஜிட்டலை பயன்படுத்தி செலவுகளை குறைத்து தொழில் முன்னெடுத்து செல்லலாம் என்பதற்காக, **Fundamentals of Digital Marketing & E-Commerce Techniques** என்ற தலைப்பில் கடந்த 14.07.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் ஜூம் செயலியின் மூலம் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது குறித்த விளக்கமளிக்க திரு. R.K. பிரேம்நாத் Enterprise Data Architect, IMEX Business Solutions அவர்கள் கலந்து கொண்டார். இவர் சேம்பர்-ல் உறுப்பினரும் ஆவார்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. B.S. ராஜன் அவர்கள் மிக அருமையாக சிறப்பு விருந்தினரை கூட்டத்திற்கு அறிமுகம் செய்தார்.

திரு. R.K. பிரேம்நாத் அவர்கள், பலதரப்பட்ட விளம்பர யுக்திகளில், டிஜிட்டல் முறையிலான விளம்பரங்கள் மிகவும் செலவுகள் குறைவானது. அதோடு, இனி வரும் காலங்களில் டிஜிட்டல் முறையிலான விளம்பரங்களே அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவத்தார். எந்த வகையிலான டிஜிட்டல் மார்க்கெட்டிங்கள் உள்ளன, எதனைத் தேர்ந்தெடுக்கலாம், எதில் செலவுகள் குறையும் என மிக அருமையாக விளக்கினார்.

அதோடு, கூகுளில் தேடு களத்தில் நம் பெயரை எவ்வாறு குறைந்த செலவில் நம் நிறுவனத்தை முன்னே கொண்டு வருவது என்பது பற்றியும் தெரிவித்தார். எந்த மாதிரியான பிரிவுகளில் வெப்சைட்கள் உள்ளது. எந்த துறையினர் எந்த மாதிரியான வெப்சைட்-ஐ தேர்வு செய்யலாம். அதன் செலவு போன்றவைகளையும் மிக அருமையாக விளக்கி தமது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்த கொண்ட அனைவருக்கும் மிக எளிமையாக புரியும் வண்ணம் இந்த கூட்டம் அமைந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்கள் கேள்விக்கான விடையை கேட்டறிந்தனர். சிறப்பு விருந்தினர் திரு. R.K. பிரேம்நாத் அவர்களை சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## வாழ்த்துக்கள்



நம் சமூகத்தை சார்ந்த, நமது சேம்பர் உறுப்பினருமான திருமதி. A.R. **மஹாலட்சுமி** அவர்கள் பாரதிய ஜனதா கட்சியின் **மாநில துணைத் தலைவராக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.



நம் சமூகத்தை சார்ந்தவரும் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்தவருமான திரு. M.S. **ராமலிங்கம்** அவர்கள் பாரதிய ஜனதா கட்சியின் **தமிழக செய்தி தொடர்பாளராக** நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை - 1.
Ph : 2320536

வாடிக்கையாளர்களின் சேவையில் 100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990

எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

# முத்திரைத்தாள் சட்ட திருத்தம்

## ஒரே பத்திரத்திற்கு பலமுறை தீர்வை இனி இல்லை

நிதிச் சட்டம் 2019-ன் மூலம் இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899-ல் கொண்டு வரப்பட்டத் திருத்தங்கள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகள், 2020 மார்ச் 30 ம் தேதியிட்ட அறிவிக்கையின்படி, 2020 ஜுலை 1 ம் தேதியில் இருந்து அமலுக்கு வருகின்றன.

தொழில் செய்யும் சூழலை எளிதாக ஆக்குவதற்காகவும், அனைத்து மாநிலங்களிலும் பங்குப்பத்திரங்கள் மீதான முத்திரைத்தாள் தீர்வை ஒரே மாதிரியாக இருக்கும்படி செய்தவற்காகவும், அதன் மூலம் இந்தியா முழுக்க ஒரே மாதிரியான பங்குப் பத்திர மார்க்கெட்டை உருவாக்குவதற்காக, மாநிலங்களுடன் உரிய ஆலோசனைகள் மற்றும் கலந்தாடல்களை செய்த பிறகு, மத்திய அரசு, இந்திய முத்திரைத் தாள் சட்டம் 1899ல் உரிய திருத்தங்களைச் செய்து, அதன் கீழ் விதிமுறைகளை உருவாக்கியது.

ஒரு பங்குப் பத்திர ஆவணத்தின் மீது ஒரு இடத்தில், ஒரு ஏஜென்சியால் (பங்கு பரிவர்த்தனை மையம் அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட கிளியரிங் கார்ப்பரேசன் அல்லது கருவூலத் துறை) முத்திரைத்தாள் தீர்வையை மாநிலங்கள் வசூலிப்பதற்கான சட்டப்பூர்வ மற்றும் நிறுவனம் சார்ந்த நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் முத்திரைத் தாள் தீர்வையைப் பகிர்ந்து கொள்வதற்கான நடைமுறையும் உருவாக்கப்பட்டுள்ளது.

பத்திரம் வாங்குபவர் வாழும் மாநிலத்தின் அடிப்படையில் அது இருக்கும் வகையில் நடைமுறை அமைந்துள்ளது. இப்போதுள்ள நடைமுறையின்படி, ஒரே பத்திரத்துக்குப் பங்கு பரிவர்த்தனைகளில் பல இடங்களில் தீர்வைகள் வசூலிக்கப்படுவதால், அதிகார வரம்பு எல்லை சர்ச்சைகளும், பல முறை தீர்வை செலுத்தும் நிலையும் உருவாகி, பங்குப் பத்திர மார்க்கெட்டில் பரிவர்த்தனை செலவுகள் அதிகரிக்கின்றன. இதனால் மூலதனம் உருவாதல் பாதிக்கப்படுகிறது.

இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899-ல் இதற்கான அம்சங்கள் நிதிச் சட்டம் 2019-ல் திருத்தப்பட்டன. மேலும், அதன் தொடர்ச்சியாக, அதே சமயத்தில், 2019 டிசம்பர் 10ம் தேதி, இந்திய முத்திரைத் தாள் (பங்கு பரிவர்த்தனை மையங்கள், கிளியரிங் கார்ப்பரேசன்கள் மற்றும் கருவூலங்கள் மூலம் முத்திரைத்தாள் தீர்வை வசூல் செய்தல்) விதிகள் 2019 திருத்தப்பட்டன. இவை 2020ஜனவரி 9-ம் தேதி அமலுக்கு வருவதாக இருந்தது. 2020 ஜனவரி 8-ம் தேதியிட்ட அறிவிக்கையின்படி, இந்தத் தேதி 2020 ஏப்ரல் 1 என மாற்றப்பட்டது.

மேலும், இதில், தொடர்புடையவர்களிடம் இருந்து வந்த கோரிக்கைகள் காரணமாகவும், கோவிட்-19 பாதிப்பால் நாடு முழுக்க முடக்கநிலை அமலுக்கு வந்தாலும், மற்ற துறைகளில் அளிக்கப்பட்ட சட்டபூர்வ மற்றும் ஒழுங்குமுறை ஒத்திசைவுகளில் அளிக்கப்பட்ட சலுகைகள் காரணமாகவும், இந்திய முத்திரைத் தாள் சட்டம், 1899ல் நிதிச் சட்டம் 2019ன் படி கொண்டு வரப்பட்ட திருத்தங்களை அமல் செய்வதற்கான தேதி, 2020 மார்ச் 30 தேதியிட்ட அறிவிக்கையின் படி 2020 ஜுலை 1 என மாற்றப்பட்டது.

**சிறப்பு அம்சங்கள்:**

- விற்பனை, பரிமாற்றம் மற்றும் பங்குப்பத்திரம் வெளியிடுதலுக்கான முத்திரைத் தாள் தீர்வை மாநில அரசு சார்பில், வசூல் ஏஜென்ட்களால் வசூலிக்கப்படும். அந்த ஏஜென்சிகள் அந்த முத்திரைத் தீர்வையை சம்பந்தப்பட்ட மாநிலத்தின் கணக்கில் செலுத்திவிடும்.
- பல முறை வரிக்கு உட்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு, அடுத்த நிலையில் பரிவர்த்தனை செய்யும் போது, முத்திரைத் தீர்வை வசூலிக்கும் அத்தாட்சி பெற்ற கருவூலம் / பங்குப் பரிவர்த்தனை மையம் மூலம் மாநிலங்கள் முத்திரை தீர்வை எதையும் வசூலிக்கக் கூடாது.
- இப்போதைய நடைமுறையின்படி, வாங்குபவர் மற்றும் விற்பவர் என இரு தரப்பினருமே முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியுள்ளது. புதிய நடைமுறையின்படி ஒரு தரப்பில் மட்டுமே (வாங்குபவர் அல்லது விற்பவர், ஆனால் இருவரும் அல்ல, வாங்குபவர் மற்றும் விற்பவர் என இரு தரப்பினரும் சம பங்கு செலுத்தும் சில குறிப்பிட்ட ஆவணப் பரிமாற்றம் தவிர்த்த விஷயங்களில்).
- பங்குப் பரிவர்த்தனை மையங்கள் அல்லது அத்தாட்சி பெற்ற கிளியரிங் கார்ப்பரேசன்கள் மற்றும் கருவூலங்கள் இதற்கான வசூல் ஏஜென்ட்களாக இருக்கும்.
- பரிவர்த்தனை சார்ந்த அனைத்து இரண்டாம் நிலை பத்திரப் பரிவர்த்தனைகளுக்கும், பங்குப் பரிவர்த்தனை மையங்கள் முத்திரைத் தீர்வையை வசூலிக்கலாம். மார்க்கெட் அல்லாத முறையிலான பரிவர்தனைகளுக்கு (வர்த்தக தரப்பாரால் தெரிவிக்கப்படும் அனுசரணைகளின்படி செய்யப்படுபவை) மற்றும் டிமேட் படிவத்தில் நடைபெறும் ஆரம்ப நிலை பங்குப் பத்திரங்கள் வெளியிடுதல் ஆகியவற்றுக்கு கருவூலங்கள் முத்திரைத் தீர்வையை வசூலிக்கும்.
- ஆர்.பி.ஐ.-ன் அதிகார வரம்புக்கு உள்பட்டு கிளியரிங் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியா லிமிடெட் (CCIL) மற்றும் வெளியீடுகளுக்கான பதிவாளர்கள் மற்றும் / அல்லது பங்கு

பரிமாற்ற ஏஜென்ட்களை (RTI / STA-கள்) வசூல் ஏஜென்ட்களாக செயல்பட மத்திய அரசு அறிவிக்கை செய்துள்ளது. OTC வகையிலான பரிவர்த்தனைகள் சி.சி.ஐ.எல்-க்கு தெரிவிக்கப்படுதல் மற்றும் பரஸ்பர நிதிகளில் டிமேட் அல்லாத, RTI / STA களால் கையாளப்படும் பரிவர்த்தனைகளை முத்திரைத் தீர்வை செலுத்தும் வரம்பிற்குள் கொண்டு வந்து, தரகுக் கட்டணத்தை தவிர்க்க வேண்டும் என்பது இதனுடைய நோக்கமாக உள்ளது.

- ஒவ்வொரு மாதம் முடிந்த அடுத்த 3 வாரங்களில் வசூல் ஏஜென்ட்கள், வசூலித்த முத்திரைத் தீர்வையை, அதை வாங்கியவர் வாழும் மாநிலத்தின் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். வாங்கியவர் இந்தியாவுக்கு வெளியில் வாழ்பவராக இருந்தால், அவருடைய வர்த்தக உறுப்பினர் அல்லது புரோக்கரின் பதிவு செய்த அலுவலகம் உள்ள மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். வாங்கியவருக்கு வர்த்தக உறுப்பினர் யாரும் இல்லாவிட்டால், பங்கேற்பாளரின் பதிவு அலுவலகம் உள்ள மாநிலத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- சம்பந்தபட்ட மாநில அரசு இந்திய ரிசர்வ் வங்கியில் அல்லது ஏதேனும் ஒரு வணிக வங்கியில் வைத்துள்ள கணக்கில், இந்த முத்திரைத் தீர்வையை வசூல் ஏஜென்ட் செலுத்த வேண்டும். இந்திய ரிசர்வ் வங்கி அல்லது சம்பந்தப்பட்ட வங்கி இந்தத் தகவல்களை வசூல் ஏஜென்ட்களுக்கு தெரிவித்திருக்கும்.
- மாநில அரசு சார்பாக முத்திரைத் தீர்வை வசூலித்தத் தொகையை அந்த மாழலத்துக்கு அனுப்புவதற்கு முன்பு, சேவைக் கட்டணங்களுக்காக 0.2 சதவீதத்தை வசூல் ஏஜென்ட்கள் கழித்துக் கொள்ளலாம்.
- பல பிரிவுகளுக்கு, தீர்வைக் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மூலதன உருவாக்கல் மற்றும் கார்ப்பரேட் பத்திர மார்க்கெட் ஊக்குவிப்புக்காக பங்கு / கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிதல் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் பரிமாற்றம் ( மறு வெளியிடுதல் உள்பட) செய்வதற்கான தீர்வை குறைவாக உள்ளது.
- ரொக்கப் பிரிவு வர்த்தகத்தில் (டெலிவரி மற்றும் டெலிவரி அல்லாத பரிவர்த்தனைகள்) மற்றும் ஆப்சன்களுக்கு, புதிய திட்டத்தின் கீழ் ஒரு தரப்பாருக்கு மட்டுமே கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும் என்பதால், ஒட்டுமொத்த அளவில் வரி குறைந்துள்ளது என்று கூறலாம்.
- சில அடிப்படைப் புள்ளிகள் வித்தியாசத்துடன் நடைபெறும் பத்திரங்கள் இரண்டாம் நிலை மார்க்கெட் பரிமாற்றத்தில், வட்டி விகிதம் / கரன்சி கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது கார்ப்பரேட் பத்திரங்கள் போன்றவற்றுக்கு இப்போது உள்ளதை விட மிக குறைவானத் தீர்வையே விதிக்கப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகம் செய்துள்ள கார்ப்பரேட் பத்திரங்கள் மீதான ரெப்போ பொருத்த வரையில், மிகவும் குறைவான தீர்வை குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நிலையில் உள்ள அரச பங்குப் பத்திரங்களுக்கான ரெப்போவுக்கு தீர்வை இல்லை என்பதால் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
- சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005-ன் பிரிவு 18-ன் கீழ் உருவாக்கப்பட்ட சர்வதேச நிதிச் சேவைகள் மையம் இதன் மூலமாகவும் உருவாக்கப்பட்ட கருவூலங்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை மையங்களில் நடைபெறும் பத்திரங்களின் பரிவர்த்தனைகளுக்கு முத்திரைத் தீர்வை எதவும் விதிக்கப்படாது.
- பங்குப் பத்திரம் வெளியிடுதல் அல்லது மறு வெளியிடுதல் அல்லது விற்பனை அல்லது பரிமாற்றம் ஆகியவை பங்குப் பரிவர்த்தனை மையங்கள் மற்றும் கருவூலங்களுக்கு வெளியே நடைபெறும் போது, தரகுக் கட்டணம் தவிர்க்கப்படுகிறது.
- பங்குப் பத்திரங்களில் டெலிவரி அடிப்படையிலான பரிவர்த்தனைகளாக பரஸ்பர நிதிகள் இருப்பதால், பல்வேறு மாநில சட்டங்களின் கீழ் தீர்வை செலுத்த வேண்டியுள்ளது. எனவே அனைத்து பரஸ்பர நிதிகளின் பரிவர்த்தனைகளும் முத்திரை தீர்வைக்கு உள்பட்டவையாக உள்ளன. புதிய நடைமுறையின்படி, அனைத்து மாநிலங்களிலும் கட்டணங்கள் ஒரே மாதிரியாக இருக்கும்படி செய்யப்பட்டு, தீர்வை வசூலிக்கும் நடைமுறையை சீராக்குவது என்ற மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

– தி இந்து



Prop.: B.S. Rajan
• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633




https://youtu.be/-JMVniVMLr0

# NEXTGEN PROGRAMS

## Leverage your efforts with Lean Management for Profitable Business

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான (NEXTGEN) **Leverage your efforts with Lean Management for Profitable Business** என்ற தலைப்பிலான கடந்த 20.06.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சிறப்பு விருந்தினராக திரு. A.S. கார்த்திக் பாபு, Senior Practitioner, Lean Management at WCO Consultants Pvt. Ltd. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## KNOW OUR MEMBERS

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் தொழில் குறித்து அறிந்து கொள்ளும் புதுமையான நிகழ்ச்சியை கடந்த 11.07.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில், புளியடி போலீஸ் திரு. P.S. பாலாஜி Director, Business Development, Marketing & Sales அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவரைத் தொடர்ந்து, How to Start an E-Commerce Business என்ற தலைப்பில், திரு. பிரேம் சோமலிங்கா, MD., Claymore IT Services P.Ltd. அவர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## NEXTGEN - FAMILY MEET

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான (NEXTGEN) கடந்த 04.07.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் மூன்று தலைப்புகளில் இந்த கூட்டத்தை Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

அதில், **Importance of Learning Foreign Languages** என்ற தலைப்பிற்கு, சிறப்பு விருந்தினராக திருமதி. சூர்யா சபரிஷ் Frozen Dessert, Salem. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பிறகு, **Home & Furnishing** என்ற தலைப்பிற்கு, சிறப்பு விருந்தினராக திருமதி. T.S. தீபா ராணி சூரஜ்லால் Sowndarya Traders, Madurai அவர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

அவரைத் தொடர்ந்து, **Opportunities in Beauty Parlour Business** என்ற தலைப்பிற்கு, சிறப்பு விருந்தினராக திருமதி. தீபிகா சபரி Viju Beauty Salon, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

முற்றிலும் NEXTGEN குழுவில் உள்ள மகளிர் பங்குகொண்டு பயன்பெரும் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உறுப்பினர்கள் பலர் ஆர்வத்துடன் பங்கு கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.


18 ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337


O.V.K. பாஸ்கரன்

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்


V.K. ஜெயசங்கர்

https://www.youtube.com/watch?v=j29cFXb4syo&list=PLU225E4EJRqgKOhA2WChOvTtMQzp0dlkF

# நம் சமூக மாணவ மாணவியர்களுக்கான ஆன்லைன் ஓவியப்போட்டி

கொரோனா ஊரடங்கு பொழுதை பயனுள்ளதாக கொண்டு செல்ல சிறப்பு பொழுதுபோக்கு நிகழ்ச்சி நம் சமூக மக்களுக்காக நடத்த திட்டமிடப்பட்டது. அதன்படி 30.06.2020 அன்று மாலை 6 மணிக்கு ஜும் செயலி மூலம் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது.

மூன்று பிரிவுகளில் இந்த ஓவியப்போட்டி நடைபெற்றது. அதில் 4ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்ட நம் சமூகத் தலைவர்கள் என்ற தலைப்பிலும், 7ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விழித்திரு, விலகியிரு, வீட்டிலிரு என்ற தலைப்பிலும், 10ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு சீனப் பொருட்களுக்கு இணையான இந்திய பொருட்கள் என்ற தலைப்பிலும் ஓவியப் போட்டி நடைபெற்றது.

இதில் மொத்தம் 75 மாணவ மாணவியர்கள் பங்கு கொண்டனர். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் நடுவராக இருந்து சிறந்த ஓவியங்களை வரைந்த மாணவர்களை தேர்ந்தெடுத்தார். இந்த பொழுது போக்கு நிகழ்ச்சியை சேம்பர் பொழுதுபோக்கு குழுத் தலைவர் திரு T.N. சூரியபிரகாஷ் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

மேற்கூரிய மூன்று பிரிவுகளிலும், முதல் மூன்று பரிசுகள், சிறப்பு பரிசுகள் மற்றும் பங்குகொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது. அதோடு, பங்கு கொண்ட அனைவருக்கும் ஊரடங்கு காலம் முடிந்ததும் சான்றிதழ் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கு மாணவ மாணவியர்களை பங்குகொள்ளச் செய்ய உதவிய, நிலையூர் குப்பைய்யன் ரத்னாமணி பள்ளி கவுன்சில் செயலாளர் திரு. T.L. ஹரி மற்றும் தெப்பக்குளம் ஸ்ரீமந் நாயகி வித்யா மந்திர் பள்ளியின் தாளாளர் திருமதி. S.P. கீதா பாரதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிகழ்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பொழுதுபோக்கு குழு உறுப்பினர்களான திரு. P.R. குபேந்திரன், திரு. V.V. சுரேஷ், திரு. B.S. ராஜன், திரு. J. சுரேஷ், திரு. K.J. ஜெயக்குமார் ஆகியோருக்கும், செயற்குழு உறுப்பினர்களான திரு. B.S. ஜெனார்த்தனன், திரு. T.R. சரவணன். திரு. N.S. பிரேம்குமார், திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ மற்றும் திரு. S.M. கார்த்தி குமரன் ஆகியோருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

## மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கியவர்கள்;

1. அமர் டெக் திரு. S.R. சுந்தர்நாத்
2. E.A.V. ரெங்காச்சாரி டெக்ஸ் திரு. E.R. குமரேசன்
3. சிவா ஏஜென்சி, சோலாப்பூர் திரு. K.S. சிவக்குமார்
4. விக்னேஷ் கிராபிக்ஸ் திரு. T.R. மோகன்ராம்
5. ஜியோ ஆர்ட்ஸ் திரு. K.K. குபேந்திரன்
6. திருமலை டிரேடிங்ஸ் திரு. S.M. கார்த்தி குமரன்

## வெற்றி பெற்ற மாணவ / மாணவியர் பெயர் விபரங்கள்:

**4ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு வரை;**

| PRIZE | NAME | CLASS |
|---|---|---|
| 1st Prize | HASWATHDARSHAN K V | VI |
| 2nd Prize | JEEVAN PRAKASH A K | IV |
| 3rd Prize | LAKSHITHA B M | VI |
| Excellence | ASRYITHA SRI | VI |
| | BALAMURUGAN B G | IV |
| | SANTHOSH KUMAR T S | VI |
| | TEJAS K K | V |

**7ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை;**

| PRIZE | NAME | CLASS |
|---|---|---|
| 1st Prize | ROHITH KANNA G V | IX |
| 2nd Prize | RITHIKARANI D B | VIII |
| 3rd Prize | POORNIKA B V | VIII |
| Excellence | SHARVAN A | VII |
| | VISHNUKUMAR R J | VII |
| | ARUN R G | IX |
| | DHARSANSRI T K | VIII |
| | HARINI J S | IX |
| | HEMANTH K V | VII |
| | KEERTHANA T J | VIII |
| | LINGESH BAABU R R | 7 |

**10ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை;**

| PRIZE | NAME | CLASS |
|---|---|---|
| 1st Prize | VISALI N S | XII |
| 2nd Prize | POOJA T B | XII |
| 3rd Prize | MALYA J G | XII |
| Excellence | DHANSHREE N J K | XII |
| | AKCHAYA T S G | XII |
| | ARUNESHWARI B S J | XII |

**வெற்றிபெற்ற மாணவர்கள் வரைந்த அருமையான, அழகான ஓவிங்களை பக்கம் 14 & 15 ல் கண்டு ரசியுங்கள்.**





Available in :
15kg Tin, 1 Ltr,
1/2 Ltr, 200ml,
100ml, 50ml


சாரதி®
நல்லெண்ணெய்




Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in


மாஸ்க்கின் முன் பக்கத்தை தொட்டு அணியக்கூடாது.


SOCIAL DISTANCE 1.5 AWAY FROM OTHERS
REG NO: DCP-222
NAME: N.THANUSHA
CLASS: IX
SCHOOL: RAJIV SCHOOL OF EXCELLENCE
STAY HOME STAY SAFE!
விழித்திரு!
விலகியிரு!
வீட்டிலிரு!
USE HANDWASH OR SOAP TO WASH YOUR HANDS PROPERLY


DCP-216 G.V. ROHITH KANNA 9th Std.
MAINTAIN SOCIAL DISTANCE
ONLINE EDUCATION
WASH YOUR HANDS REGULARLY
WEAR MASK


Name: T.S.G. AKCHAYA
DCP-302
JAI HIND!!


STAY HOME STAY SAFE


Name: T.K. Priya
class: VIII
Phone No: 6369861668
School: N.K.K.R.V. middle School


REG NO: DCP-304 NAME: N.J.K. DHANSHREE
SCHL NAME: RAJAN MATRIC HR. SEC. SCHOOL
CHINA PRODUCTS!



AVOID SHAKING HANDS WITH OTHERS
MAINTAIN SOCIAL DISTANCE
STAY HOME TO STAY SAFE
WASH HANDS OFTEN


DCP: 221
Our Heroes PROTECT FROM CORONA VIRUS
Please Keep Social Distancing
Stay Home Stay Safe
Keep Our Place clean!!!






Yes To India
No To China
Amul
Patanjali
Parachute

Support our mother land
OPPO
Chinese Products
RATINGS
3/10 #cheap #dangerous
APPS
PRODUCTS
Rs.500/-
Rs.20,000/-
中国
BOYCOTT CHINESE PRODUCTS!!
भारत
Indian Products
Ratings
9.5/10
Apps
Products
BUY INDIAN PRODUCTS
Rs.250/-

DCP-311
SCHOOL: RAJAN MAT HR SEC SCHOOL
CELL NO: 9994813404
NAME: N.S. VISALI
STD: XII
BOYCOTT MADE IN CHINA
USE MADE IN INDIA




DCP-306
TATA
micromax
Paytm
Amul
The Taste of India
VIVO
OPPO




DCP - 201A. R.G. ARUN "9th" GOU. HY. Sec. School
Stay Safe
Stay healthy
2m




2 METER
6 FEET
FIGHT CORONA
26/DCP-215/RITHIKA RANI 8th




JAI HIND
VANDE MATARAM
ST JOHNS SCHOOL




Wear Mask
Stay home
wash your hands often
Avoid Crowd




DOs
STAY HOME STAY SAFE
DONT's
20 SEC
WASH HANDS
STOP
COVID-19
AVOID CROWD
2M
KEEP SOCIAL DISTANCING
AVOID HANDSHAKE
WEAR MASK
PRACTICE NAMASTE
AVOID TOUCHING EYES...
• PREVENTION IS BETTER THAN CURE...

# DRAWING COMPETITION WINNERS


K.V. Hashwathdarshan


A.K. Jeevan Prakash


B.M. Lakshitha


G.V. Rohith Kanna


T.B. Rithikarani


B.V. Poornika


N.S. Visali


T.B. Pooja


J.G. Malya


O.K. Asryitha Sri


B.G. Balamurugan


T.S. Santhosh Kumar


K.K. Tejas


A. Sharvan


N. Thanuja


R.J. Vishnukumar


R.G. Arun


T.K. Dharsansri


J.S. Harini


K.V. Hemanth


R.R. Linesh Babu


T.S.G. Akchaya


B.S.J. Arunehwari


N.J.K. Dhanshree

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.

# புதிய வரி நடைமுறையில் ஊழியர்களின் பயணப்படிக்கு வரி விலக்கு சலுகை அறிவிப்பு

தி இந்து

பட்ஜெட்டில் புதிய வரி நடைமுறையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

இந்தப் புதிய வரி நடைமுறையானது குறைந்த வரி விதிப்பு நடைமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இந்தப் புதிய வரி நடைமுறையில் முன்பு வழங்கப்பட்டு வந்த பல வரி விலக்கு சலுகைகள் நீக்கப்பட்டன. தற்போது பயணப்படிக்கான வரி சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயணச் செலவுகளுக்கான படி, சுற்றுலா பயணத்துக்கான செலவுகள், பணியிட மாறுதலுக்கான பயண செலவுகள், வேலை நிமித்தமான பயணச் செலவுகள் போன்றவற்றுக்கு வரிவிலக்கு கோரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயணங்களின் போது ஆகும் இதர செலவுகளும் நிறுவனம் வழங்கும்பட்சத்தில் அதற்கும் வரிவிலக்கு கோரலாம். ஆனால், அலுவலகத்தில் இலவச உணவு, தேநீர் போன்ற பானங்களுக்கான செலவுகள் இதில் சேர்க்கப்பட மாட்டாது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் பிற மாற்றுத்திறனாளி ஊழியர்கள் கூடுதலாக மாதம் ரூ. 3200 வரை வரி விலக்குப்பெற முடியும்.

# GeM அரசு மின்னணு சந்தையில் (Government e Marketplace) பொருட்கள் விற்பனைக்கு நாட்டின் பெயர் கட்டயாம்

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் சிறப்பு துணை அமைப்பான அரசு மின்னணு சந்தை இடம் **GeM**, அனைத்து புதிய உற்பத்தி பொருள்களை விற்பனை செய்பவர்கள் இதற்காக பதிவு செய்யும் போது, தங்களது நாட்டின் பெயரைக் குறிப்பிடுவதைக் கட்டாயமாக்கியுள்ளது.

இந்தப் புதிய முறை அமல்படுத்தப்படுவதற்கு முன்பு, தங்களது பொருள்களைப் பதிவேற்றம் செய்தவர்களும், அவ்வப்போது தங்களது சொந்த நாட்டின் பெயரைக் குறிப்பிட வேண்டும் என்றும், இதனைச் செய்யாதவர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்றும் ஜெம் எச்சரித்துள்ளது.

“மேக் இன் இந்தியா”, “சுயசார்பு இந்தியா” இயக்கங்களைப் பிரபலப்படுத்துவதற்காக இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உற்பத்தி பொருள்களில் உள்ளூர் பொருள்களின் பங்கு என்ன என்பதைக் குறிக்கும் வகையிலான பிரிவை ஜெம் (GeM) ஏற்படுத்தியுள்ளது.

இந்த புதிய நடைமுறைப்படி, சந்தை இடத்தில் உள்ள அனைத்துப் பெருள்களிலும், அதன் தயாரிப்பு நாடு, உள்ளூர்ப் பொருள்களின் சதவீத அளவு ஆகியவை இடம் பெற்றிருக்கும். மிகவும் முக்கியமாக, மேக் இன் இந்தியா வழிகாட்டிக்கான வசதி தளத்தில் இடம் பெற்றுள்ளது.

குறைந்தபட்சம் 50 சதவீத உள்ளூர் உள்ளீடு இடம் பெற்றிருப்பதை உறுதிசெய்து வாங்குபவர்கள் பொருள்களைத் தேர்வு செய்ய முடியும். ஏல முறைகளில், வாங்குபவர்கள் தரம் 1 உள்ளூர் விநியோகஸ்தர்களுக்காக (உள்ளூர் உள்ளீடு 50 சதவீதத்திற்கும் மேல்) ஒதுக்கிக் கொள்ளலாம்.

இந்திய ரூபாய் மதிப்பில் 200 கோடிக்கு குறைவான ஏலங்களில், தரம் 1, தரம் 2 உள்ளூர் விநியோகஸ்தர்கள் (உள்ளூர் உள்ளீடு முறையே 50%க்கும் அதிகம், 20%க்கும் அதிகம்) மட்டும் தகுதி பெறுவர். இதில் தரம் 1 விநியோகஸ்தர் கொள்முதல் முன்னுரிமை பெறுவார்.

ஜெம் தளத்தின் உள்ளூர் உள்ளீட்டுக்கான அம்சங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஜெம் முறை செயல்பாட்டுக்கு வந்தது முதல், மேக் இன் இந்தியா முயற்சியைப் பிரபலப்படுத்துவதில் அது தொடர்ந்து பணியாற்றி வருகிறது. மேக் இன் இந்தியா முறையை அமல்படுத்தும் அதே நேரத்தில், பொது கொள்முதலில் உள்ளூர் சிறிய விற்பனையாளர்கள் பதிவு செய்வதற்கான வசதி சந்தை இடதில் உள்ளது. அந்த வகையில், இந்திய அரசின் எம்எஸ்இ கொள்முதல் முன்னுரிமை கொள்கைகள் உண்மையான உணர்வுடன் இதில் வெளிப்படுகிறது.

கோவிட்-19 தொற்றுக்கு எதிரான போராட்டத்திற்கு, அரசு அமைப்புகளுக்கு, உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகள் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இத்தருணத்தில், ஜெம், விரைவான, திறன் மிக்க, வெளிப்படையான, செலவு குறைவான கொள்முதலுக்கு வகை செய்கிறது. அரசு பயனாளர்கள் ஜெம் மூலம் கொள்முதல் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இதற்காக மத்திய நிதி விதிமுறைகள், 2017-ல் புதிய விதியான 149 சேர்க்கப்பட்டதன் மூலம், நிதி அமைச்சகம் இதனைக் கட்டாயமாக்கியுள்ளது.

– தி இந்து

அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

## முத்ரா சிசுக் கடன்

# உரிய முறையில் திருப்பிச் செலுத்தினால் 2% வட்டி மானியம்

– மத்திய அரசு ஒப்புதல்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் (PMMY) கீழ் தகுதி வாய்ந்த கடனாளர்கள் பெறும் அனைத்து சிசுக்கடன் தொகைக்கும் 12 மாதங்களுக்கு 2 சதவீத வட்டி மானியம் அளிக்கும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும் – 31.03.2020 அன்று நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் 31 மார்ச் 2020 அன்றுள்ள படியும், திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலகட்டம் வரை ரிசர்வு வங்கி வழிமுறைகளுக்கு ஏற்ப அறிவிக்கப்பட்ட திரும்பி வாராக் கடன் வகைப்பாட்டில் வராத கடன்கள் இத் திட்டத்தில் அடங்கும்.

வாங்கப்பட்ட இந்தக் கடன் வாராக்கடன் வகைப்பாட்டின் கீழ் சேர்க்கப்படாத மாதங்களுக்கு கடன் வட்டி மானியம் வழங்கப்படும். NPA மாறிய பிறகு, கடன் கணக்கு திரும்பி வரும் கணக்காக மாறும் மாதங்களும் இதில் அடங்கும். கடன்களைத் தொடர்ந்து செலுத்தி வருகின்ற நபர்களுக்கு இந்தத் திட்டம் ஊக்கத்தொகை அளிப்பதாக உள்ளது. இந்தத் திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட செலவு தோராயமாக ரூ. 1542 கோடி ஆகும். இந்தத் தொகையை மத்திய அரசு வழங்கும்.

இந்தத் திட்டமானது ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் அறிவிக்கபட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ், வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு ரூ. 50000 வரை வழங்கப்படும் கடன்கள் சிசுக் கடன்கள் என்பதாகும். முத்ரா கடன்களை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், வங்கிப்பணி சாராத நிதிநிறுவனங்கள் மற்றும் மைக்ரோ நிதி நிறுவனங்கள் போன்ற முத்ரா லிமிட்டில் பதிவு செய்துள்ள கடன் வழங்கும் நிறுவனங்கள் வழங்குகின்றன.

தற்போதைய கோவிட்–19 நெருக்கடி, அதன் விளைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள ஊரடங்கு ஆகியன சிசு முத்ரா கடன்கள் மூலம் நிதி பெற்று செயல்படும் குறு, சிறு தொழில் நிறுவனங்களின் வர்த்தகத்தைத் தீவிரமாகப் பாதித்துள்ளன. சிறிய அளவிலான வர்த்தக நிறுவனங்கள் மிகக் குறைவான லாபமே ஈட்ட முடியும். தற்போதைய ஊரடங்கு அந்த நிறுவனங்களின் பணப்புழக்கத்தைக் குறைத்துள்ளது. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் அளவிற்கு அவர்களால் நிறுவனத்தை இயக்க முடியாமல் இருக்கிறது. இந்தப் பிரச்சனைகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலைமையானது எதிர்காலத்தில் நிதி நிறுவனங்களில் இருந்து கடன் பெறுவதில் பிரச்சினையை ஏற்படுத்தும்.

31 மார்ச் 2020 அன்றுள்ளபடி, முத்ரா கடன் சிசுப் பிரிவின் கீழ் மொத்தக் கடன் தொகை ரூ. 1.62 லட்சம் கோடி அளவுக்கு 9.37 கோடி கடன் கணக்குகளில் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டம் இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் 12 மாதங்களுக்கு இது செயல்பாட்டில் இருக்கும்.

கோவிட்–19 ஒழுங்குமுறை செயல் தொகுப்பின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதித்து உள்ளவாறு சம்பந்தப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்கள் தவணைகளை காலம் தாழ்த்திச் செலுத்த அனுமதித்துள்ள கடன் வாங்கியவர்களுக்கு இந்தத் திட்டமானது 12 மாத காலங்களுக்கு அதாவது செப்டம்பர் 01, 2020 முதல் ஆகஸ்ட் 31, 2021 வரையான தவணை செலுத்தும் காலம் முடிந்த பிறகு தொடங்கும். கடன் பெற்றுள்ள மற்றவர்களுக்கு இந்தத் திட்டம் ஜூன் 01, 2020 தொடங்கி 31, மே 2021 வரை நடப்பில் இருக்கும்.

எதிர்பாராமல் ஏற்பட்டுள்ள ஒரு சூழலைச் சமாளிக்கும் வகையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரமிடின் கடைசி வரிசையில் உள்ள கடன் வாங்கியோருக்கு ஏற்பட்டுள்ள நிதிச்சுமையை நீக்குவதை அதாவது அவர்களின் கடன் செலவைக் குறைப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தொழில் பிரிவினருக்குத் தேவைப்படும் நிவாரணத்தைப் போதுமான அளவில் இந்தத் திட்டம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நிதிப்பற்றாக்குறையைக் காரணம் காட்டி தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்காமல் சிறு வர்த்தகத்தை தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

இந்த நெருக்கடியான சமயத்திலும் சிறிய அளவு வர்த்தகம் தொடர்ந்து நடைபெற உதவுவதன் மூலம் இந்தத் திட்டமானது பொருளாதாரத்தின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கலுக்கு இன்றியமையாது தேவைப்படும் இந்தத் தொழில் பிரிவை புதுப்பிக்கவும் இது உதவும். *– தி இந்து*





PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

## பாதிப்புக்குள்ளாகியுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு உதவ

# மற்றொரு நிதியுதவித் திட்டம் தொடக்கம்

குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி இன்று அத்துறை சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான துன்புறும் சொத்துக்கள் நிதி – துணைக்கடன் என்றும் இது வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 20,000 கோடி மதிப்பிலான உத்தராவதம் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். தங்கள் தொழிலுக்குத் தேவையான மறு மூலதனத்துக்கு இதைப் பயன்படுத்தி இந்தத் தொழில் நிறுவனங்கள் வங்கிகளில் கடன் பெறலாம். பாதிப்புக்குள்ளாகி இருக்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் கடனாகவோ, பங்குகளாகவோ மூலதனம் திரட்டுவது மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது உணரப்பட்டது.

ஆகவே, சுயசார்பு இந்தியா சலுகைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய நிதியமைச்சர் மே மாதம் 13ம் தேதி இத்தொழில் நிறுவனங்கள் துணைக் கடன் பெறும் இத்திட்டத்தை அறிவித்தார். பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல், நிதியமைச்சகம், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி உள்ளிட்ட பிற அமைப்புகளுடனான ஆலோசனை போன்ற சம்பிரதாய நடைமுறைகள் முடிவடைந்த பின்னர், அமைச்சர் திரு. நிதின் கட்கரி நாக்பூரிலிருந்து இந்தத் திட்டத்தை முறைப்படி தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

## முக்கிய அம்சங்கள்

- 2020 ஏப்ரல் 30ம் தேதி நிலவரப்படி, பாதிப்புக்குள்ளாகி, வாராக்கடன் நிலைமைக்கு தள்ளப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை இயக்க அதன் உரிமையாளர்களுக்கு ஆதரவுக்கரம் வழங்க இத்திட்டம் கோருகிறது.
- குறு, சிறு, நடுத்தரத் தொழில் முனைவோருக்கு அவர்களது பங்குகளில் (பங்கு மற்றும் கடன்) 15 சதவீத அளவுக்கு இணையாகவோ அல்லது ரூ. 75 லட்சமோ இதில் எது குறைவோ அது கடனாக வழங்கப்படும்.
- உரிமையாளர்கள் இதனைத் தங்கள் தொழிலாகத்தின் பங்குத் தொகையாக அளித்து, தொழில் நடத்துவதற்கான தொகையை அதிகரித்து கடன்-பங்கு விகிதத்தைப் பராமரிக்க வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் 90 சதவீதம் உத்தரவாதம் இந்தத் துணைக் கடனுக்கு வழங்கப்படும். எஞ்சிய 10 சதவீத உத்தரவாதத்தை உரிமையாளர்கள் அளிக்க வேண்டும்.
- 7 ஆண்டுகள் வரை அசலைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. அதே சமயம், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அதிகபட்சக் கால அவகாசம் 10 ஆண்டுகளாகும்.

இத்திட்டம் சுமார் 2 லட்சம் குறு,சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மிகவும் தேவையான ஆதரவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இத்துறையின் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் ஊட்ட இது உதவும்.

இத்தொழில்களை நம்பி இருக்கும் லட்சக்கணக்கான மக்களின் வழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் இது உதவும் இத்திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த இத்துறை தொழில் முனைவோர் எந்த வணிக வங்கிகளையும் அணுகி பயன் பெறலாம். குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- PIB News




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633




https://youtu.be/-JMVniVMLr0

# உத்யம் பதிவு

## சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் பதிவுக்கான புதிய நடைமுறை

குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான மத்திய அமைச்சகம் 22.06.2020 தேதியிட்ட தனது அறிக்கையில் ஏற்கனவே தெரிவித்துள்ள படி தொழிற்சாலைகளை வகைப்படுத்தி பதிவு செய்கின்ற புதிய நடைமுறையானது 1 ஜுலை 2020 முதல் தொடங்கியது. உத்யம் பதிவின் முக்கியமான அம்சங்கள்:

- குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் பதிவு நடைமுறை முழுவதும் ஆன்லைனில் காகிதப்பயன்பாடு இல்லாமல் சுய உத்தரவாதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒரு குறு, சிறு, நடுத்தரத் தொழிலகத் தொழிற்சாலையைப் பதிவு செய்வதற்காக எந்த ஒரு ஆவணத்தையோ அல்லது ஆதாரத்தையோ பதிவேற்றம் செய்ய வேண்டிய தேவை இல்லை.
- பதிவு செய்வதற்கு ஆதார் எண் தேவை.
- பதிவு செய்த பிறகு பதிவு எண் வழக்கப்படும்.
- பதிவு செய்யும் நடைமுறைகள் முடிவடைந்த பிறகு உத்யம் பதிவு சான்றிதழ் வழங்கப்படும்.
- இந்தச் சான்றிதழில் டைனமிக் கியூ.ஆர் கோட் இருக்கும். இதன் மூலம் அமைச்சகத்தின் போர்ட்டலில் உள்ள இணைய பக்கத்தையும் அந்த தொழிற்சாலை குறித்த விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.
- பதிவைப் புதுப்பிக்க வேண்டிய தேவை இல்லை.
- நிரந்தரக் கணக்கு எண் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி இணைக்கப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு மற்றும் ஆண்டுத்தொழில் தொகை குறித்த விவரங்கள் சம்பந்தப்பட்ட அரசு தரவுத்தொகுப்பில் இருந்து தானாகவே எடுத்துக் கொள்ளப்படும்.
- குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் ஆன்லைன் சிஸ்டமானது வருமான வரி மற்றும ஜி.எஸ்.டி.ஐ.என் அமைப்புகளுடன் முற்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் கீழ் எந்த ஒரு அதிகாரியும் வழங்கி உள்ள இ.எம்-II அல்லது யு.ஏ.எம். பதிவு அல்லது வேறெந்த பதிவையோ வைத்துள்ளவர்கள் தாங்களாகவே மீண்டும் பதிவு செய்தாக வேண்டும்.
- எந்த ஒரு தொழிற்சாலையும் ஒரு உத்யம் பதிவுக்கு மேல் பதிவு செய்யக்கூடாது. ஆனால் ஒரே பதிவில் உற்பத்தி அல்லது சேவை அல்லது இரண்டும் உள்ளடக்கிய பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம் அல்லது சேர்த்துக் கொள்ளலாம்.
- அரசின் உதவி இயக்குமுறையானது ஒற்றைச் சாளர அமைப்பு என்ற பெயரில் சாம்பியன் கட்டுப்பாட்டு அறையில் மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டத் தொழில் மையத்தில் இந்த நடைமுறைக்காக பொதுமக்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.
- பதிவு நடைமுறை அனைத்தும் இலவசம். இது தொடர்பாக எந்த விதமான கட்டணமும் இல்லை. செலவும் இல்லை.

இந்த நடைமுறையானது மிக எளிமையானதாக, சிரமமில்லாததாக, தொழில் முனைவோருக்கு உதவுவதாக இருக்கும் என்று அமைச்சகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் எளிமையாக வர்த்தகம் மேற்கொள்ளுதல் என்பதற்கான ஒரு உதாரணமாக இது விளங்கும்.

– தி இந்து

Sowndarya Traders
Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# கொரோனாவால் கிடைத்த கண்டுபிடிப்புகள்!

ஒருபுறம் கொரோனா உலகை அச்சுறத்தி வந்தாலும், மறுபுறம் நமது விஞ்ஞானிகளின் கற்பனையைத் தட்டிவிட்டு பல நூதன கண்டுபிடிப்புகளை உருவாக்க வைத்துள்ளது. கவச உடைகள், செயலிகள், சமூக இடைவெளியை உறுதி செய்யும் கருவி போன்றவற்றை மாணவ விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். இந்தியாவில் கடந்த ஒருசில மாதங்களில் விஞ்ஞானிகள் உருவாக்கிய புதிய சாதனங்கள், தேவைக்கேற்ப மாற்றி வடிவமைத்த சாதனங்களில் சில...

**புதிய அவதாரத்தில் டிரோன்:** கொரோன நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சளி, காய்ச்சல் ஏற்படுவதே முதல்கட்ட அறிகுறிகள். மக்களிடம் காய்ச்சலைக் கண்டறிவதற்கான பணியை எளிதாக்குவதற்காக, அகச்சிவப்பு கதிர்கள் மூலம் உடல் வெப்பநிலையை அளவிடவல்ல கேமரா பொருத்தப்பட்ட ஆளில்லா சிறிய ரக விமானத்தை (டிரோன்) குவாஹாத்தி ஐஐடி வடிவமைத்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நோய்த்தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக கிருமிநாசினியைத் தெளிப்பதற்கும் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஊரடங்கை மீறுபவர்களைக் கண்காணிப்பதற்கும் நோய்த்தொற்று தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ட்ரோன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**கிருமிகளை கொல்லும் கருவி:** வெளியில் வாங்கி வரும் காய்கறிகள், பாக்கெட் பொருட்கள் உள்ளிட்டவற்றின் புறப் பரப்பிலும் பணம், நாணயங்கள் உள்ளிட்டவற்றிலும் கொரோனா வைரஸ் இருக்க வாய்ப்புகள் உள்ளன. அவற்றைக் கொல்வதற்காக புற ஊதாக் கதிர்களை வெளியிடும் பல்பு அடங்கிய பெட்டி வடிவிலான கருவியை ரோபார் ஐஐடி வடிவமைத்துள்ளது.

**உபசரிக்கும் ரோபோக்கள்:** கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வதற்காக நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்தகள், உணவுகளை அளிப்பது, அவர்களின் அறையிலிருந்து குப்பைகளை சேகரிப்பது உள்ளிட்ட பணிகளைச் செய்வதற்கு ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**சுவாசக் குழாய் கருவி:** கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு செயற்கை சுவாசக் கருவி மூலம் சிகிச்சை அளிக்கும் நிலை ஏற்பட்டால் அவரது மூச்சுக்குழல் வழியே குழாயை செலுத்த வேண்டிவரும். அப்போது, நோயாளிக்கு ஏற்படும் இருமல் மூலம் கொரோனா தீநுண்மி மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது. அவ்வாறு வெளியேறும் தீநுண்மியைக் கட்டுப்படுத்துவதற்கான பெட்டி அளவிலான கருவியை குவாஹாத்தி ஐஐடி வடிவமைத்துள்ளது.

**டிஜிட்டல் ஸ்டெதஸ்கோப்:** மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையே சமூக இடைவெளியை உறுதிப்படுத்தும் நோக்கில் டிஜிட்டல் ஸ்டெதஸ்கோப் கருவியை மும்பை ஐஐடி மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். இந்த கருவி மூலம் நோயாளியைத் தொடாமல் அவரது இதயத் துடிப்பைக் கேட்டு அதை டிஜிட்டல் முறையில் பதிவு செய்யவும் முடியும்.

**தனிமைப்படுத்துவத்றகான கவச உறை:** கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கான கவசஉறை வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கவச உறையினுள் விளக்கு உள்ளிட்டவை பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படாது. அந்த நோயாளியிடமிருந்து சுகாதாரப் பணியாளர்களுக்கு நோய்த்தொற்று பரவுவது தடுக்கப்படும்.

**செயற்கை சுவாசக் கருவி:** குறைந்த செலவிலான செயற்கை சுவாசக் கருவியை (வெண்டிலேடர்) ரூர்கி மற்றும் கான்பூர் ஐஐடி மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். அந்தக் கருவியை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எளிதில் எடுத்துச் செல்ல முடியும். ஆக்ஸிஜன் கவசம் (பபுல் ஹெல்மெட்) மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும் நோயாளிகளுக்கு செயற்கை முறையில் சுவாசம் அளிப்பதற்காக வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஆக்ஸிஜன் குழாய்க்கு மாற்றாக கவசம் போன்ற கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. நோயாளியின் தலையிலிருந்து கழுத்து வரை இந்தக் கவசம் பொருத்தப்படும்.

**திறன்மிகு குப்பைத தொட்டி:** மருத்துவமனைகள், பொது இடங்கள், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை உரிய நேரத்தில் அகற்றும் நோக்கில் சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர்கள் திறன்மிகு குப்பைத் தொட்டியை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் குப்பைத் தொட்டியில் சேகரிக்கப்படும் குப்பையின் அளவை அறிதிறன்பேசி மூலம் கண்காணிக்க முடியும். அவ்வாறு கண்காணித்து, குப்பைத் தொட்டி நிரம்பி வழியும் முன்பே அதிலிருந்து குப்பைகளை அகற்றிவிட முடியும்.

– தி இந்து

வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது 3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.

# கோவிட்–19க்கு எதிரான போராட்டத்தில் வணிக உரிமையாளருக்கான 8 குறிப்புகள்

2020ம் ஆண்டுக்கு முன்பு வரை, எப்போதும் நமது பூமி உறக்க நிலைக்குச் சென்றதில்லை. யாரும் எதிர்பார்க்காத ஒரு பொருளாதார சிக்கலாக இந்த நோய் தொற்று சூழல் மாறியுள்ளது. ஆனால், பெரிய இடையூறுகள், பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும். பெரிய மாற்றங்கள், பெரிய வாய்ப்புகளையும், இலக்கை அடைய புதிய வழிகளையும் கொண்டு வரும். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் தான் இதில் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. பல வியாபாரங்கள் மீண்டுவர நீண்ட நாட்கள் ஆகும் என்றும், அதற்கு அவர்கள் பெரும் முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாறுதலை நோக்கிய இந்த பயணத்தில், ஒருவர் கவனம் செலுத்த வேண்டிய எட்டு வழிகள் உள்ளன.

**1. நேர்மறையாக இருங்கள்:** நேர்மறை ஆற்றலை வெளிப்படுத்தும் போது நேர்மறை விஷயங்களை ஈர்ப்பீர்கள். இந்த சூழலில் நேர்மறையான சிந்தனை உங்களையும், உங்கள அணியையும் ஊக்குவிக்கும். மறுமலர்ச்சியை நோக்கிய நம் பயணத்தில் இதுதான் முதல் படி.

**2. வியாபாரத் திட்டத்தை மதிப்பிடுங்கள்:** இப்போதைய சூழலைப் பார்க்கும் போது, ஒருவர் தனது வியாபார இலக்குகளை மாற்றியமைத்து, உடனடியாக செயல்படுத்தக் கூடிய யதார்த்தமான, முழுமையான வளர்ச்சித் திட்டத்தை வகுக்க வேண்டும். நன்றாக யோசித்து அமல்படுத்தப்படும் யதார்த்தமான திட்டம், இந்த பயணத்தை எளிமையானதாக்கும். தேவையில்லாத வழிச் சிதறலை தடுக்கும்.

**3. பணம் முக்கியம்:** எந்த வியாபாரத்துக்கும், குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு இதுதான் அடிப்படை மற்றும் முதல் கவலையாக இருக்கும். நிறுவனத்தின் தற்போதைய சூழலில் நிதி மதிப்பீடு செய்வது முக்கியம். கட்டமைப்பு, ஆள் சேர்ப்பு, நிதி ஓட்டம், வர வேண்டிய பணம் மற்றும் பொறுப்புகளுக்கு தேவையான முதலீடு சம்பந்தமான முடிவுகளை எடுக்க சி.ஏ.வுடன் கலந்தாலோசிக்க தேவை வரலாம்.

**4.தொழில்நுட்பத்தின் உதவி:** நிஜ உலகில் விலகலையும், மெய்நிகர் உலகில் நெருக்கத்தையும் இந்த உலகம் பேணும். மாறும் தொழில்நுட்பத்தை புரிந்து அதற்கேற்ப நாம் பொருந்திப் போகத் தயாராக இருக்க வேண்டும். எல்லா நடைமுறைகளும் டிஜிட்டலாக மாற்றப்பட வேண்டும். வியாபாரத்தில் தொழில்நுட்ப பயன்பாடு என்பது, இருந்தால் நன்றாக இருக்கும் என்ற நிலையிலிருந்து கட்டாயமாக இருக்க வேண்டும் என்ற நிலைக்கு மாறியுள்ளது. தொழில்நுட்ப உதவியுடன் தான் நாம் வாடிக்கையாளரை சென்றடைய முடியும்.

**5. அரசு விதிமுறைகளை அறியவும்:** அரசாங்கத்தின் நிவாரணம், சிஐஐ முதலிய வர்த்தக அமைப்புகளின் நிதி உதவி ஆகியவற்றைப் பற்றி உண்மையான, நம்பக்கூடிய தகவல்களைப் பெறுவது மிக முக்கியம். வியாபாரங்களுக்கும், தனி நபர்களுக்கும் உதவ அரசாங்கம் அறிவிக்கும் கொள்கைகள், வழிமுறைகள் தொடர்ந்து தெரிந்து கொள்ளுங்கள். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கென நிதியமைச்சர் வரிவான ஊக்குவிப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார். உங்கள் வியாபாரம் நீடித்திருக்க அதை ஒழுங்காகப் புரிந்து கொண்டு, சரியாகப் பயன்படுத்துவது முக்கியம்.

**6. டிஜிட்டல் பிராண்ட் உருவாக்கம்:** வலுவான டிஜிட்டல் பிராண்டை உருவாக்குவது வியாபாரத்தில் இன்னொரு முக்கிய அம்சம். யார் நமது வாடிக்கையாளர் என்று தெரிந்து, அவர்களுக்கு நாம் யஸர் என்று எப்படி அறிமுகம் செய்வது, எது நம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது, எதனால் நாம் சிறந்தவர்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

**7. மக்கள்:** நீங்கள் உங்கள் அணியை நன்றாகப் பார்த்துக்கொண்டால், அவர்கள் உங்கள் வியாபாரத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள். நன்றாக செயல்படும் அணிக்கு, ஊக்குவிப்பும், நம்பிக்கையும் முக்கியமான தேவைகள். ஒருவரின் வேலை என்ன என்பது தெளிவாக விளக்கப்படும்போது, அறிவுறுத்தல்கள் கச்சிதமாக இருக்கும் போது பணிபுரிபவர் இன்னும் சிறப்பாக செயலாற்றுவார். மாறிவரும் சூழலுக்கு ஏற்ப பொருந்துவதற்கு பயிற்சி செய்வது, அணியின் மன உறுதியை இன்னும் வலுப்படுத்தும்.

**8. வாடிக்கையாளர்:** நான் எனது வாடிக்கையாளருக்கு எந்த வகையில் சிறப்பாக உதவ முடியும் என்பதே எல்லா தொழில்களும் பதிலளிக்க வேண்டிய கேள்வியாக இருக்கும். தானியங்கி இயந்திரத்தை விட மனிதர்களிடம் உரையாடத் தான் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் விரும்புவார்கள். இந்த புதிய சகஜ நிலையின் முக்கிய விஷயங்கள் பற்றித் தெரிந்து கொள்ள, தனிப்பட்ட மேலாளர் ஒருவரை நியமிப்பது சிறந்த வழிமுறையாக இருக்கும். ஒவ்வொரு மாற்றமுமே நமக்கு இரண்டு தேர்வுகளைத் தரும். ஒன்று அந்த மாற்றத்தை ஏற்காமல் உறுதியாக நிற்பது. இரண்டு அந்த மாற்றத்தை ஆரத்தழுவி வரவேற்பது. மாறுதல் என்கிற சிக்கலை முதல் தேர்வு தவிர்க்குமென்றாலும், இரண்டாவது தேர்வு தான், வலுவான, பிரகாசமான எதிர்காலத்தை கட்டமைக்க உதவும். எப்போதும் ஒரு மாற்று இருக்கிறது என்பதை நம்புங்கள்.

– தி இந்து

# இ–சஞ்சீவனி ஓபிடி

*வீட்டிலிருந்தபடியே பெறும் இலவச தொலை மருத்துவ ஆலோசனை சேவை*
*– மத்திய அரசின் நடவடிக்கை*

வீட்டில் பாதுகாப்பாக இருந்தவாறு, மக்கள் மருத்துவ ஆலோசனை பெறுவதற்கான இலவச தொலை மருத்துவ ஆலோசனை முறையை **இ–சஞ்ஜீவனி ஓபிடி** மூலம் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் இயக்கி வருகிறது www.esanjeevaniopd.in என்ற வலைதளம் வாயிலாக தேசிய ஆன்லை வெளி நோயாளி சேவை செயல்படுத்தப்படுகிறது.

இதில், வீட்டில் வசதியாக இருந்தவாறு, மருத்துவர்களிடம் சிகிச்சை பெற முடியும். இதற்கு,

- கேமரா – மைக் வசதி கொண்ட மடிகணினி அல்லது கணினியுடன், வீடியோ அழைப்பு வசதி கொண்ட டாப்லெட் அல்லது கைபேசி தேவை.
- ஓடிபி எனப்படும் ஒரு தடவை கடவுச்சொல் வைத்து வைலதளத்தின் வாயிலாக ஆலோசனை பெறலாம். கூகுள் குரோம் அல்லது மொசில்லா பயர்பாக்ஸ் மென்பொருள் மூலம் வலைதளத்தைத் திறக்கலாம்.
- முதலில், இ-சஞ்ஜீவனி ஓபிடி வலைதளத்தில் பதிவு செய்து, டோக்கன் எண்ணை உருவாக்க வேண்டும்.
- இது தொடர்பான, குறுந்தகவல் வந்ததும், இ-சஞ்ஜீவனி ஓபிடி வலைதளத்தில் Login செய்ய வேண்டும்.
- அது, இயங்கத் தொடங்கும் வரை காத்திருந்து, Call Now பொத்தானை அழுத்த வேண்டும். இறுதியாக, மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம். மின்னணு மருந்துச்சீட்டு அளிக்கப்படும்.
- புதிதாக இதைப் பயன்படுத்துபவர்கள் இ-சஞ்ஜீவனி ஓபிடி வலைதளத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். https://www.esanjeevaniopd.in வலைதளத்துக்கு சென்று, நோயாளியின் பதிவு பொத்தானை அழுத்த வேண்டும்.
- கைபேசி எண்ணை தெரிவித்து, ஒரு தடவை கடவுச்சொல்லுக்கு கிளிக் செய்ய வேண்டும். ஒரு தடவை கடவுச் சொல் குறுந்தகவல் மூலம் தெரிவிக்கப்படும்.
- இதைப் பயன்படுத்தி, நோயாளி பற்றிய தகவல்களை பூர்த்தி செய்து, டோக்கன் பக்கத்தை உருவாக்க வேண்டும்.
- எக்ஸ்ரே, சோதனைக்கூட ஆய்வு முடிவுகள் உள்ளிட்டவற்றை JPEG or PDF வடிவில் படிவங்களை இணைக்க வேண்டும்.
- பூர்த்தி செய்யும் நடைமுறைகள் முடிந்த பின்னர், நோயாளியின் ஐடி டயலாக் பாக்ஸ் மற்றும் டோக்கன் பொத்தானைப் பெற கிளிக் செய்ய வேண்டும். நோயாளியின் ஐடி, டோக்கன் ஆகியவை குறுந்தகவல் மூலம் அனுப்பப்படும்.
- இதேபோல், நோயாளியின் முறை நெருங்கும்போது, குறுந்தகவல் மூலம் கூறப்படும்.
- இப்போது மீண்டும் நோயாளியின் ஐடியை லாக்கின் செய்த பின்னர், அவர் மெய்நிகர் ஆலோசனை அறையில், வரிசையில் சேர்க்கப்படுவார். கால் நவ் பொத்தான் இயங்கத்தொடங்கியதும். அதை அழுத்தலாம்.
- அந்தப் பொத்தானை அழுத்திய பத்து வினாடிகளில் மருத்துவரின் முகம் திரையில் தோன்றும். ஆலோசனை இவ்வாறு தொடங்கி, முடிவில் மருத்துவர் மின்னணு மருந்துச்சீட்டை தருவார்.
- இதை பதிவிறக்கம் செய்து, அருகில் உள்ள மருந்தகங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழகத்தில், அனைத்து நாட்களிலும், நோயாளிகள் காலை 10 முதல் பிற்பகல் 3 மணி வரை ஆலோசனைகளைப் பெறலாம்.

மருத்துவர்கள் கொரோனா அறிகுறியுள்ள நோயாளிகளைக் குணப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருவதால், நேரடியான ஆலோசனை அவசியம் தேவை என்றாலோ அல்லது அறுவை சிகிச்சை அவசியம் என்றாலோ தவிர, ஆன்லைன் மருத்துவ ஆலோசனையைத் தேர்வு செய்வதே புத்திசாலித்தனமாகும் என்று பொது மக்கள் பலர் கூறுகின்றனர். மேலும், கோவிட்-19 பொது முடக்கச் சூழலில், இணையதளம் பாதுகாப்பன முறையாக உள்ளது. பொது இடங்களில், கூட்டம் கூடுவதைத் தவிர்க்க ஆன்லைன் சேவைகள் பெரிதும் உதவுகின்றன.

இணையதள வங்கிச் சேவை, வீட்டிலேயே பரிவர்த்தனைகளை மேற்கொள்ள உதவுகிறது. அதோடு, அலுவலகக் கூட்டங்களை நடத்த ஜூம், ஸ்கைப், கூகுள் மீட் போன்றவை உதவுகின்றன. கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் கூடத்தில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க, காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட பலசரக்கு சாமான்களை ஆன்லைன் மூலம் பதிவு செய்து பெறலாம். வழக்கமான மருத்துவ கவனிப்பு தேவைப்படுபவர்களுக்கு, பெரிய வரப்பிரசாதமாக, மத்திய அரசிடம் இருந்து இந்த இலவச ஆன்லைன் தொலை மருத்துவ ஆலோசனை இப்போது கிடைத்துள்ளது என்கின்றனர்.

**- PIB News**




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# TDS படிவத்தில் மாற்றங்களைக் கொண்டு வருகிறது வருமான வரித்துறை

வருமான வரி செலுத்தபவர்களிடம் இருந்து மேலும் விரிவான தகவல்களை பெறுவதற்காக, டி.டி.எஸ்., (TDS) படிவத்தில் வருமான வரித்துறை மாற்றங்களைக் கொண்டு வருகிறது.

மத்திய நேரடி வரிகள் வருவாய் ஆணையமானது இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

இனி வரி பிடித்தம் செய்பவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக வருவாய் மூலத்தில் வரி பிடித்தம் செய்யவில்லை என்றால், அதற்கான காரணத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அதேபோல் வங்கிகள் இனி தங்கள் கிளைகளில் இருந்து ரூ. 1 கோடிக்கும் அதிகமான பணம் எடுக்கப்பட்டால் அதற்கான வருவாய் மூல வரி பிடித்தம் குறித்து தெரியப்படுத்த வேண்டும்.

வருமான வரி விதிகளில் மாற்றம் செய்யப்பட்டு, இ-காமர்ஸ் வர்த்தகம் செய்வோர், பரஸ்பர சகாய நதி மற்றும் தொழிலவ் அறக்கட்டளைகள் மூலம் அளிக்கப்படும் ஈவுத் தொகை, வங்கிகளில் இருந்து பெரிய அளவில் பணம் எடுத்தல் ஆகியவை டி.டி.எஸ். (வருவாய் மூல வரி பிடித்தம்) வரம்பிற்குள் கொண்டு வரப்படுகின்றன.

என்.ஆர்.ஐ-கள் உள்ளிட்டோருக்கான டி.டி.எஸ் வரி பிடித்தம் செய்வதற்கான 26Q மற்றும் 27Q ஆகிய படிவங்களில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*- தி இந்து*

# ஜி.எஸ்.டி வரி

## மேலும் எளிமையாக்கப்படும்

வர்த்தகம் செய்வதை மேலும் எளிமையாக்குவதை உறுதிப்படுத்தும் வகையில் ஜி.எஸ்.டி வரி வசூலை மேலும் எளிமையாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தெரிவித்துள்ளார். ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்பட்டு மூன்றவாது ஆண்டு தினம் சிபிஐசி மற்றும் நாடு முழுவதும் உள்ள அதன் பல அலுவலகங்களில் அனுசரிக்கப்பட்டது. சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கும், ஒரே நாடு ஒரே வரி சந்தை என்ற குறிக்கோளை முன்னெடுத்துச் செல்லவும் இருந்த தடைகளை உடைப்பதற்கு ஜி.எஸ்.டி கருவியாக இருந்தது.

ஜி.எஸ்.டி நாளையொட்டி வெளியிட்ட செய்தியில் பங்குதாரர்களின் கருத்துக்களுக்கேற்ப ஜி.எஸ்.டி வரி நிர்வாகம் எளிமையாக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறினார். எனினும் வரி செலுத்துவதை மேலும் எளிமையாக்க, மேலும் பல முயற்சிகள் தேவைப்படுகின்றன.

மேலும் அவர் கூறுகையில் பிரதமரின் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவோம் என்ற அறைகூவலுக்கு அதிக கவனம் செலுத்தப்படும். வர்த்தகம் செய்வதை மேலும் எளிமையாக்குவதை உறுதிப்படுத்தும் வகையில் வரி செலுத்துபவர்களுக்கு வரி நிர்வாகத்தை மேலும் எளிமையாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்வோம். வர்த்தக சமுதாயத்தினருக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து முன்கூட்டியே அறிந்து, அவற்றுக்கு முன்னதாகவே தீர்வு காண்போம் என்று அவர் கூறினார்.

**- PIB News**


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# யோகா செய்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பிரதமர் வலியுறுத்தல்

கோவிட்-19 பெருந்தொற்றை எதிர்த்துப் போராடுவதில் சிறந்த வழி, நிரூபிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது தான்.

அண்மையில், மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, "யோகா'' மக்களின் வாழ்க்கையுடன் பிரிக்க முடியாததாக மாறியுள்ளது என்றும், சுகாதார விழிப்புணர்வும் அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

ஊரடங்கின் போது, மக்கள் ஆன்லைன் வகுப்புகள் அல்லது ஆன்லைன் வீடியோக்களைப் பார்ப்பதன் மூலம் யோகா பயிற்ச்சிகளைச் செய்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். ஒட்டுமொத்த உடல் நலத்தை அதிகரிக்க, வாரத்துக்கு ஒரு முறையோ அல்லது இருமுறையோ யோகா நித்ரா செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை முன்னதாக டுவிட்டர் மூலம் பிரதமர் தெரிவித்திருந்தார். அது மேலும் மனதை லேசாக்குவதுடன், அழுத்தத்தையும், பதற்றத்தையும் குறைக்கிறது.

சூரிய வணக்கம் உள்பட பல்வேறு யோகாசனங்களின் அனிமேசன் வீடியோ படங்களை வெளியிட்டதுடன், அவர் யோக நித்ரா குறித்த வீடியோவையும் பகிர்ந்து கொண்டார். மரத்தின் தோற்றம் போன்ற விருக்சாசனா மூளைத் தசைகளுக்கு வலிமையைத் தருவதுடன், கால் தசைகளை வலுப்படுத்தவும் உதவுகிறது.

திருச்சி ஸ்ரீரங்கத்தின் விவேகானந்தா யோகா மையத்தின் யோகா மாஸ்டர் டாக்டர். சந்தானகிருஷ்ணன், "பஸ்திரிகா பிராணாயாமம்'' என்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான மிக முக்கியமான பயிற்சியாகும் என்று கூறினார். அழ்ந்த முச்சுப்பயிற்சி நுரையீரல்களில் உள்ள நச்சுப்பொருள்கள் மற்றும் அசுத்தங்களை அகற்ற உதவும். வஜ்ராசனா அல்லது சுகாசனாவுடன் பஸ்திரகா பிராணாயாமம் செய்யலாம். மூச்சை ஆழ்ந்து உள்ளிழுத்தல், அதனைக் கட்டாயமாக வெளிக்கொணர்தல் மூலம் நுரையீலர்களின் அனைத்து அசுத்தங்களையும் வெளியேற்ற முடியும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, யோகாவின் முக்கியத்துவத்தை நமது பிரதமர் வலியுறுத்தியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். நுரையீரல்கள் சிறப்பாக இயங்க, பஸ்திரிகா பிராணாயாமத்தை தினசரி 20 முறை செய்யலாம் என அவர் கூறினார்.

மற்றொரு யோகா மாஸ்டரான டாக்டர் ஸ்ரீதர், ஹங்கினி யோகா முத்ரா செய்யுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டார். மாணவர்களின் நினைவாற்றலை இந்த யோகா முத்ரா அதிகரிக்க உதவும் என்று அவர் தெரிவித்தார். படிப்பதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு இந்த முத்திரையை சிறுவர்கள் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். ஊரடங்கின் போது காலை நடைப்பயிற்சி பாதிக்கப்பட்டுள்ளதால், உங்கள் உடலைத் தகுதியுடன் வைத்திருக்க உட்கடாசனா மிகச்சிறந்த வழி என்று அவர் கூறினார்.

திருச்சியைச் சேர்ந்த இல்லத்தரசி திருமதி. பிரமிளா, ஊரடங்கின் போது மனதை லேசாக வைத்திருக்க யோகா மிகவும் உதவுகிறது என்று கூறினார். நமது தடையற்ற சுவாசத்துக்கு, மூச்சுப்பயிற்சி மிகவும் அவசியம் என பிரதமர் சுட்டிக்காட்டியதை அவர் நினைவு கூர்ந்தார். கோவிட்-19 நமது சுவாச உறுப்புகளைப் பாதிக்கும் என்று கருதப்படுவதால், தொற்றுக்கு எதிராகப் போராட யோகா சிறந்த வழிமுறையாக உள்ளது. ஷீஷுவாசனா மார்பை சுத்தப்படுத்துவதுடன், மனதுக்கு நிம்மதியை அளிக்கும். சேது பந்தாசனா ரத்த ஓட்டத்தை சீராக்கும். புஜங்காசனா, மத்யாசனா, தனுராசனா ஆகியவை உடலை வலுப்படுத்தக்கூடியவை. ஆனால், இந்த ஆசனங்களை யோகா மாஸ்டரின் முறையான வழிகாட்டுதலின் மூலம் செய்ய வேண்டம்.

ஜூன் 21 ம் தேதியை யோகா தினமாக உலகம் முழுவதும் ஐநா சபை கொண்டாடுகிறது. நமது பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த தினம் அறிவிக்கப்பட்டது. கோடைக் காலத்தில் நீண்ட நாளாக அது கருதப்படுவதால், அன்றையதினம் யோகா தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவின் வேண்டுகோளை ஏற்ற ஐநா சபை 2015-ம் ஆண்டு முதல், ஜுன் 21-ம் தேதியை யேஸக தினமாக அறிவித்துக் கொண்டாடி வருகிறது. கொடிய உயிர்க்கொல்லித் தொற்றுக்கு எதிராக உலகமே போரில் ஈடுபட்டுள்ள நிலையில், நோயைக் குணப்படுத்துவதாகவும், எதிர்ப்பு சக்தியை ஊக்குவிப்பதாகவும் செயல்படும் யோகா நமது பாரம்பரியத்தின் கொடையாகும். அது தற்போது உலகம் முழுவதும் பரிவியுள்ளது.

**- PIB News**


வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!

SCT

MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL

24X7 LOCAL TV CHANNEL IN MADURAI

Get in on Google Play Store

Sourashtra Cable TV SCT

விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்

94430 34009
99424 17417
98421 91906

sctchannelmdu@gmail.com

GSTIN : 33ADWFS4457J1ZD


தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டால் இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

# செயல்
## விளைவுத் தத்துவம்

அடிக்கடி சினம் கொள்பவர்களுக்கும், மனதில் கவலைகளை வைத்திருப்பவர்களுக்கும் ரத்த அழுத்தநோய் வரும். அவரவர் செயல்களே அவரவர் இன்ப துன்பங்களுக்குக் காரணம். இதுவே செயல் – விளைவுத் தத்துவம்.

**தீதும் நன்றும் பிறர்தர வாரா**

சினத்தைப் பயன்படுத்தாவிட்டால் நற்பயன் விளையவே விளையாது என்று காணும் இடத்தில் சினம் தேவைதான். ஆனால் இந்தச் சினமானது யார் மீது செலுத்தப்படுகிறதோ அவர்களுக்கு மட்டும்தான் அது சினமாகத் தோன்ற வேண்டும்; மற்றபடி அது நமக்கு சினமாகவே இருக்கக்கூடாது.

சினம் உதட்டில் இருக்கலாம், உள்ளத்தில் இருக்கக்கூடாது. சினம் வந்தது போல் வேண்டிய அளவு நடிக்கலாம். குரலை உயர்த்திப் பேசலாம். ஆவேசத்தை வேண்டுமானாலும் காட்டலாம். ஆனால் அது போலியாக இருக்க வேண்டும்.

மனம் மட்டும் நீர்த்தளம் போல் சமமாக வேண்டும். இதயத்துடிப்பு இயல்பாகவே இரக்க வேண்டும். நா குழரக்கூடாது. கை நடுங்கக் கூடாது. கண் சிவக்கக்கூடாது. சினம் கொள்வதுபோல் நடிக்கக் கற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

அடிக்கடி சினம் கொள்பவர்களுக்கும் மனதில் கவலைகள் வைத்திருப்பவர்களுக்கும் மன ஆரோக்கியம் இருக்காது. உடல் ஆரோக்கியமும் கெடும். மன ஆரோக்கியமே உடல் ஆரோக்கியத்திற்கு ஆதாரம்.

கடவுளை அறிந்தவர்களே சினமும், கவலையும் இல்லாமல் வாழும் மன ஆற்றலையும் அறிவையும் பெற்றிருப்பார்கள். கடவுளை அறிந்தவன் கடமையில் வாழ்வான். கடவுளை அறியும் கலையே யோகா. வாழ்க வளமுடன்.

– திருவேதாத்திரியம்

# தரையில் அமர்ந்து சாப்பிடலாம் வாங்க!

பாரம்பரிய முறைப்படி தரையில் அமர்ந்து சாப்பிடுவது விஞ்ஞான ரீதியாக சிறந்ததென நிரூபிக்கப்பட்டுள்ளது. கால்களை ஒன்றின் மீது ஒன்றாக போட்டு அமர்வதை யோகாசனத்தில் **சுகாசனம்** என்று குறிப்பிடுவார்கள். இப்படி அமர்வதன் மூலம் சாப்பிடுவதற்கு முன் நினைவாற்றலும், உணவை உட்கிரகிக்கும் சக்தியும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

- தரையின் மீது இப்படி அமர்வதன் மூலம் உடலின் கீழ்ப்பகுதி அனைத்தும் கால்களின் மீது நெருக்கமாக இறங்குகிறது. இதனால் உடல் மேற்பகுதியில் உள்ள இதயத்திற்கு ரத்தம் ஒரே சீராகச் செல்வதுடன், வயிற்றுப் பகுதியிலும் ரத்த ஓட்டம் சமநிலையில் இயக்கம் பெறும்.
- கால்களை குறுக்காக மடித்து அமர்வதால் வயிற்று தசைப்பகுதிகள் மற்றும் உணவை ஜீரணிக்க வைக்க உடல் உறுப்புகளிலிருந்து இயற்கையாக சுரக்கும் திரவம் சுரப்பது சுலபமாகும். இது மட்டுமின்றி குனிந்து உணவைக் கையால் எடுத்து வாய்க்கும் கொண்டு செல்வதன் மூலம் உடலின் முதுகுப்பகுதி வளைந்து நிமிர்வது நல்ல உடற்பயிற்சியாகும்.
- தரையில் அமர்ந்து உணவை உட்கொள்வதால் 20 நிமிடங்கள் நீங்கள் சாப்பிட்ட உணவு போதுமா – போதாதா? என்ற தகவலை உங்கள் மூளைக்கு அனுப்பும் திறமை நரம்புகளுக்கு உண்டு. குனிந்து நிமிர்வதன் மூலம் சாப்பிடும் நேரம் குறைவதால், நரம்புகள் அளிக்கும் தகவலைப் பெற மூளை தயாராகிறது. இதனால் அளவுக்கு மீறி சாப்பிடுவதும் தவிர்க்கப்படுகிறது.
- **சுகாசனம்** உங்கள் எதிரில் இலையில் அல்லது தட்டில் பரிமாறப்படும் உணவு வகைகளை பார்க்கும் போதே, மனதில் ஒரு நிறைவை ஏற்படுத்துவதோடு, கால்கள் மீது உடல் பகுதி அழுத்தி அசைவற்ற நிலை உண்டாகிறது. இதனால் உணவை சாப்பிடுவதற்கான தகவலை மூளைக்கு மட்மின்றி உடலில் உள்ள முக்கியமான ஐந்து உறுப்புகளுக்கும் நிறைவாக சாப்பிட உத்தரவு கிடைக்கிறது. இந்த ஆசனம் மூலம் வயிற்றுப் பகுதி வலுவடைவதோடு, சத்தான உணவுகளை ஏற்கும் சக்தியையும் அதிகரிக்க வைக்கும்.

– தினமணி


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**





இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

25

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...



மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



LAABH

SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 93441 97952







LAABH

SAMACHAR

MULTI COLOR ADVT.

Contact: 93441 97952



RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.07.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
TÜV NORD GROUP
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects



HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm





Applications :
- Sarees
- Bed Sheets
- Furnishing
- Dress Material
- Blankets
- Made Ups
- Shirting


N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com


T.S. Saravanan